முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No.231/2018

தேதி : 08-04-2026

(பி.வா.சா.3) – திரு.தனுஷ்கோடி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. பிரதிவாதி எனக்கு என்ன வேண்டும் என்றால் ஒரே அலுவலகத்தில் பணிபுரிகிறோம். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் த.அ.போ.கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றுகிறேன். பிரதிவாதி என்ன வேலை பார்க்கிறார் என்றால் அதில் கணக்காளராக பணிபுரிகிறார். வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் பற்றி தெரியும் என்றால் அதை பற்றி தெரியாது, ஆனால் வாதியிடம் பெற்ற முன்தொகையாக ரூ.4 லட்சத்தில் 2லட்சத்தை திருப்பி செலுத்திவிட்ட விபரம் தெரியும். சுபாஷ் சந்திரபோஸை எப்படி தெரியும் என்றால் அவரும் எங்கள் நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிகிறார். நானும் சுபாஷ் சந்திரபோஸ்ம் உறவினரா என்றால் இல்லை. பிரதிவாதி வாதியிடம் ரூ. 4 லட்சம் 14.11.2016ல் பெற்றுக்கொண்டு ஒரு அடமானம் பத்திரம் எழுதிக்கொடுத்து பதிவு செய்து கொண்டார் என்றால் அதை பற்றி தெரியாது. கிரைய ஒப்பந்தம் மற்றும் அடமான பத்திரம் பற்றி தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி அந்த விபரத்தை என்னிடம் சொல்லவில்லை யா என்றால் சொன்னார். என்ன சொன்னார் என்றால் கொடைக்கானலில் உள்ள சா ய்பாபா கோவில் பின்புறம் உள்ள இடத்திற்காக முன்பணமாக ரூ. 4 லட்சம் பெற்றதாக சொன்னார். பிரதிவாதி என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

2. அந்த விபரத்தை நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நடேசன் பத்திரம் அலுவலகம் எங்குள்ளது என்றால் உசிலம்பட்டி பழைய தாலுகா எதிர்புறம் உள்ளது. பிரதிவாதி ரூ. 2ல ட்சத்தை கொடுத்த விபரம் யாருக்கெல்லாம் தெரியும் என்றால் எனக்கு, சுபாஷ் சந்திரபோஸ், வாதி, பிரதிவாதி மற்றும் ஜார்ஜ் ஆகியோருக்கு தெரியும். ரூ . 2லட்சத்தை கொடுத்ததற்கு எழுதி

வாங்கினாரா என்றால் பணம் கொடுக்கும்போது இருந்தேன், ஆனால் எழுதி கொடுத்தாரா என்று தெரியாது. அந்த சமயத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் ஒரு மணி நேரம் இருந்தேன். பிரதிவாதி என்னுடன் பணிபுரிபவர் என்பதால் வாதியிடம் பெற்ற ரூ 4 லட்சத்தில் 2 லட்சத்தை திருப்பி செலுத்திவிட்டதாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.